புதுமலர்: 19 இதழ்: 01 தை – மாசி

# அனல்

01.01.2022 ஆசிரியர்: போதகர் வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## விடுவிக்கும் ஆண்டு 2022

**... அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.**

சங்கீதம் 107:28

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கவிதை
03. கதையும் கற்றதும்
04. நற்செய்திப்பகுதி
05. குறுக்கெழுத்துப்போட்டி - 105
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. வினா விடை - 107
09. சிறுவர் வட்டம்
10. அருட்பணியாளர் சரிதை
11. அனலின் புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி
12. மாற்றங்கள்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2022 happy New year

# அனலின் குரல்

**சகல மகிமையும் நம் தேவனுக்கே!**

2021இல் சகல வழிகளிலும் நம்மோடு கூட இருந்து, எம்மை பாதுகாத்து, பராமரித்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி நன்றிகள்.

அன்பின் அனல் வாசக உள்ளங்களே இயேசுவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். கடந்த ஆண்டு கடந்து வந்த பாதைகள் பெரும்பாலும் உங்களைச் சோர்வடையச் செய்திருக்காது என நம்புகின்றேன். ஏனெனில் எம் ஆண்டவர் எம்மோடு கூட இருக்கிறார். இப் புதிய வருடத்திலும் நாம் அவரை அதிகமாய் நெருங்குவோம்.

லூக்கா சுவிசேஷத்தில் 7ஆம் அதிகாரம் 36-50 வரையான வசனங்களில் பரிசேயன் ஒருவன் இயேசுவை விருந்துக்கு அழைத்தான். இயேசு அங்கே இருக்கிறார் என்பதை அறிந்த பாவியான ஒரு ஸ்திரீயும் அங்கே வந்தாள். ஆனால் பரிசேயன் கொடுக்காத கனத்தையும் மரியாதையையும் பாவியாகிய அந்த ஸ்திரீ கொடுத்தாள். அதனாலேதான் லூக்கா 7:44இல் இயேசு சொன்னார்: 'நான் உன் வீட்டிலே பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை? இவளோ கண்ணீரினாலே என் கால்களை நனைத்து',... இஸ்ரவேலில் ஒருவர் வீட்டுக்குச் செல்லும் போது வாசலில் தண்ணீரினாலே கால்களை கழுவிச் செல்ல வேண்டும். ஆனால் பரிசேயன் அங்கே தண்ணீர் கொடுக்கவில்லை.

உண்மையான வரவேற்பை பரிசேயன் செய்யவில்லை. பாவியாகிய ஸ்திரீ தன் உடைந்த உள்ளத்தில் இருந்து வந்த கண்ணீரினாலே இயேசுவின் பாதங்களை நனைத்தாள். தன் தலைமயிரினால் பாதங்களைத் துடைத்தாள். உண்மையாக வரவேற்பை கொடுத்து தன் மகிமையை அவருக்குச் செலுத்தினாள்.

பரிசேயன் மேலோட்டமான அழைப்பு, ஆனால் ஸ்திரீயோ தன் வாழ்வுக்குள் அவரை அழைத்தாள். பரிசேயன் மகிமையை இயேசுவுக்கு கொடுக்கவில்லை; ஸ்திரீயோ தன் மகிமையை இயேசுவுக்கு கொடுத்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூக்கா 7:45 இயேசு கூறினார்: 'நீ என்னை முத்தஞ் செய்யவில்லை. இவளோ நான் உட்பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள்.'

பரிசேயன் உண்மையாக இயேசுவை நெருங்கிச் சேரவில்லை. ஸ்திரீ உண்மையாக இயேசுவை நெருங்கிச் சேர்ந்தாள். சிறப்பான ஓர் ஆராதனையை அவள் செய்தாள்

லூக்கா 7:46 சாதாரணமான எண்ணை கூட பரிசேயன் கொடுக்கவில்லை. ஆனால் அந்தப் பெண்ணோ இயேசுவின் பாதங்களுக்குப் பரிமள தைலம் பூசினாள். தன்னிடமுள்ள விலையேறப்பெற்றதை இயேசுவுக்கு கொடுத்தாள்.

இப் புதிய ஆண்டில் கிறிஸ்துவை எம் வாழ்வுக்குள் உண்மையாக அழைப்போம். பாவத்தோடு இருந்து பரிசுத்தவான் போல வேஷம் போட்ட பரிசேயனைப் போலவா? அல்லது உண்மை யாக பாவியாக இருந்து உண்மையான பரிசுத்தவாட்டியாக மாற்றப்பட்ட அந்த ஸ்திரீ போலவா வாழப்போகின்றோம்.

இவ்வாண்டு இயேசுவுக்கு உண்மையான வரவேற்பு கொடுப்போம். உண்மையாக எம் வாழ்வுக்குள் இயேசுவை அழைப்போம். மகிமையை முழுவதுமாய் இயேசுவுக்கு செலுத்துவோம். மெய்யாய் இயேசுவை நெருங்கிச் சேருவோம். விலையுயர்ந்த எம் வாழ்வை இயேசுவுக்கு கொடுப்போம். உண்மையான ஆராதனை எம் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணித்து செய்வோம்.

- ஆசிரியர் -

2022

அனல் சஞ்சிகையின்

**புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

உண்மையுள்ள தேவன் துணையாய் இருந்து,
உடல் சுக ஆரோக்கியம் தந்து
பசிபோக்கி, பாவம் நீக்கி வேண்டுதல்களுக்கு
பதில் தந்து: குறைவுகள் நீங்கி
நிறைவுகள் பெற்று
உள்ளத்தில் சமாதானத்தோடு
அனுதினமும் தேவனை
நினைத்து, தேவ வசனத்தில் நடந்திட
அனலின் புதுவருட நல்வாழ்த்துக்கள்!.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பணிவோம் தூயவரின் பாதம் நன்றாய்!

இருபத்தொன்றின் இன்னல்கள்
கடந்தது நேற்றுடன்
புத்தாண்டின் புதுக்கிருபை
தேற்றட்டும் ஆண்டு முழுவதும்


நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
நடத்திடட்டும் எம்மை தம் சித்தப்படி
நன்மையோ தீமையோ எது நடந்திடினும்
சார்ந்திடுவோம் தேவனின் மார்பினிலே

இவ்வாண்டும் ஆண்டு நடத்திடும் எம்மை
நாமறியா ஆபத்திலே காத்து நடத்திடும் எம்மை
கொள்ளை நோயின் கொடுமை தாக்காது
உம் தழும்புகள் கொண்டு மூடிடும் எம்மை

நித்திய வாழ்வை நாம் நினைக்க
அனுதினம் கிருபை கூரும் எமக்கு
அகலட்டும் அநித்தியத்தின் ஈர்ப்பு
சேர்க்கட்டும் தேவனோடு உறவாட கைகோர்ப்பு

நிறைவேற இடங்கொடுப்போம் தேவசித்தம் எம்மில்
அழகாக வனையட்டும் தம் கரத்தால் எம்மை
2022இல் தூய்மையாகுவோம் ஒன்றாய்
பணிவோம் தூயவரின் பாதம் நன்றாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்



## கர்த்தருடைய சத்தம்

❑ வை. விமலதாஸ்

ஓர் ஊரில் மனிதர் ஒருவர் பண்ணை ஒன்றை வைத்திருந்தார். இப் பண்ணையில் அவர் பலவிதமான பயிர்வகைகள் மற்றும் பல மிருகங்களையும் வளர்த்து வந்தார். அவருக்கு பண்ணையை வைத்து பராமரிப்பதில் மிகுந்த விருப்பம் இருந்தமையால் அந்த வேலையை மிகச் சிறப்பாக செய்து வந்தார். அவ்வாறு அவர் விவசாயம் செய்வதைக் குறித்து அயலில் உள்ள கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் கேள்விப்பட்டு அவரை வந்து சந்தித்தார்கள். அவர்கள் சொன்னார்கள், ஐயா அயலில் உள்ள கல்லூரியில் நாங்கள் கல்வி கற்று வருகின்றோம். சில பயிற்சிகளை நாங்கள் செய்ய வேண்டியுள்ளது. அதனை உங்கள் பண்ணையில் மேற்கொள்வதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட அந்த மனிதருக்கு ஆச்சரியமாகவும் வியப்பாகவும் இருந்தது. கல்லூரியில் கற்கும் மாணவர்கள் எதற்காக பண்ணையில் வந்து வேலை செய்ய வேண்டும் என நினைத்தவர், சரி வாருங்கள் வந்து உங்கள் பயிற்சியை மேற்கொள்ளுங்கள் என்று அனுமதி கொடுத்தார். அவர்களும் பண்ணையில் வந்து பயிர்ச்செய்கை மேற்கொள்வது, விலங்குகளை வளர்ப்பது என பல காரியங்களைக் கற்றுக் கொண்டார்கள்.

ஒரு நாள் இந்த மனிதர் தன்னுடைய மாடுகளுக்கு தீவனம் கொடுப்பதற்காக வைக்கோல் பட்டறைக்குச் சென்று வைக்கோலை எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது தவறுதலாக அவர் கரத்திலே கட்டியிருந்த கைக்கடிகாரம் கழன்று வைக்கோல் பட்டறைக்குள் விழுந்து விட்டது. கைக்கடிகாரம் விழுந்ததை இவர் கவனிக்கவில்லை. சில மணிநேரம் கழித்த பின்னர்தான் தனது கைக்கடிகாரம் தொலைந்துவிட்டது என்பதை உணர்ந்தவர் அந்த வைக்கோல் போருக்குள் தேட ஆரம்பித்தார். ஆனால் அதற்குள்ளிருந்து தன்னுடைய கைக்கடிகாரத்தை கண்டு பிடிக்க அவரால் முடியவில்லை. அதனால் மிகுந்த சோகத்துடன் ஓர் இடத்தில் அமர்ந்திருந்தார்.

அதைப்பார்த்த அந்த கல்லூரி மாணவர்கள் இவரிடம் என்ன பிரச்சினை என்று விசாரித்தார்கள். அவரும் நடைபெற்ற காரியத்தை சொன்னார். இதைக் கேட்ட எல்லோரும் சேர்ந்து கைக்கடிகாரத்தை வைக்கோல் போருக்குள் தேடினார்கள். ஆனால் அவர்களாலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியில் அந்த மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்: வேண்டாம் அதைவிட்டுவிடுங்கள், சொற்ப நாட்கள் கழித்து அதை பார்ப்போம் என்றார். ஆனால் அந்த மாணவர்களில் ஒருவன் மட்டும் அவரிடத்தில் வந்து ஐயா, அந்த கைக்கடிகாரம் அவ்வளவு முக்கியமானதா? நீங்கள் இவ்வளவு சோகமாக இருக்கிறீர்களே? என்று கேட்டான்.

அவர் சொன்னார், ஆம் என்னுடைய மகள் எனக்காக இதை வாங்கிக் கொடுத்திருந்தாள். அவளுடைய நினைவாக இதை வைத்திருந்தேன். ஆனால் இன்று அது தொலைந்துவிட்டது என்று வருத்தப்பட்டார். அதைக் கேட்ட அந்த மாணவன், ஐயா இன்னும் ஒரு தடவை அதை கண்டுபிடிக்க நான் முயற்சிக்கிறேன் என்றான். அதற்கு அந்த மனிதர் சொன்னார், இவ்வளவு நேரம் நாம் எல்லோரும் சேர்ந்து தேடியும் அதைக் கண்டுபிடிக்க முடியிவில்லை. இப்போது நீங்கள் மட்டும் அதைத் தேடி எப்படி கண்டுபிடிப்பீர்கள். வேண்டாம் அதை விட்டுவிடுங்கள் என்றார்.

ஆனால் அந்த மாணவன் இவரை விடுவதாக இல்லை, நான் ஒரு தடவை முயற்சித்து பார்க்கிறேன் என்றான். அந்த மனிதரும் சரி முயற்சி செய்து பார் என்றார். இப்போது அந்த மாணவன் நேராக அந்த வைக்கோல் பட்டறைக்குச் சென்று அந்த வைக்கோல் பட்டறை மேல் தன் காதை வைத்து கவனமாக சத்தத்தைக் கேட்க ஆரம்பித்தான். அந்த மனிதருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர் யோசித்தார், கைக்கடிகாரத்தை தேடுகிறேன் என்று சொல்லிவிட்டு இவன் சென்று அங்கே தரையிலே காதை வைத்து படுத்திருக்கிறானே, என்ன செய்கிறான் என்று ஆச்சரியத்தோடு பார்த்தார். ஆனால் அந்த மாணவன் தன் காதை தரையில் வைத்து கவனமாக கைக்கடிகாரம் சுழலும் சதத்தத்தை மிகவும் கூர்மையாக அவதானித்துக் கேட்டான்.

சொற்ப நேரத்தில் எழுந்து நேராக சென்று ஓர் குறிப்பிட்ட இடத்தில் தேட ஆரம்பித்தான். தேடியவன் அந்த கைக்கடிகாரத்தை கண்டு பிடித்து எடுத்து அந்த மனிதரிடத்தில் கொடுத்தான். கைக்கடிகாரத்தை பார்த்த அந்த மனிதர் மிகவும் சந்தோஷப்பட்டார்.

அவர், தம்பி நாங்கள் எல்லோரும் மிகவும் கஷ்டப்பட்டு தேடினோம், ஆனால் எங்கள் ஒருவராலும் முடியவில்லை. ஆனால் எப்படி உன்னால் மட்டும் முடிந்தது. எப்படி அதைக் கண்டு பிடித்தாய் என்று கேட்ட போது அந்த மாணவன் சொன்னான், நாம் எல்லோரும் அதைத்தேடினோம்தான், ஆனால் நான் அந்த கைக்கடிகாரத்தின் சத்தத்திற்காக காத்திருந்தேன். அந்த கைக்கடிகாரத்தின் டிக்..டிக்.. சத்தம் எனக்கு கேட்டது. அந்த சத்தத்தை வைத்து கைக்கடிகாரத்தை கண்டு பிடித்தேன் என்றான்.

ஆம் நண்பர்களே! பார்த்தீர்களா, அந்த மாணவன் எவ்வளவு புத்திசாலித்தனமாக காரியத்தை செய்தான். அவன் அந்த கைக்கடிகாரத்தின் சத்தத்தை கவனமாக அவதானித்தமையால் அதைக் கண்டு கொண்டான். அதே போன்று நாமும் பல காரியங்களை செய்து முடிக்க வேண்டும் என்று எப்போதும் ஓய்வில்லாது ஓடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் கவனிக்க வேண்டிய காரியத்தை செய்யாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். இதனால் தான் நாம் எமது இலக்கை அடைய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் எதைத் தேடவேண்டும் என்றால் முதலாவது தேவனுடைய சத்தத்தை தேட வேண்டும். பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டிலும் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு நடப்போம். **சங்கீதம் 29:4 கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது; கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருக்கத்திலே நெருங்கிவரும் தேவன்

❑ பர்னபா




ஆண்டவரும் இரட்சகரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனலின் நற்செய்தி வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு எல்லோருக்கும் பயங்கரங்கள் நிறைந்த காலங்களாக இருந்தது. மில்லியன் கணக்கான மக்கள் பலியானார்கள். ஆனாலும் தேவனாகிய கர்த்தர் எம்மோடு கூட இருந்து ஒவ்வொருவரையும் பாதுகாத்து வியாதிகள் ஏற்பட்டாலும் சுகபெலன் தந்து இந்த புதிய ஆண்டைக் காண உதவி செய்தார். எனவே இந்தப் புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கும் எங்கள் ஒவ்வொருவரையும் இவ் ஆண்டின் முடிவு வரைக்கும் தேவன் பாதுகாத்து நடத்துவாராக. ஆமென்.

**சங்கீதம் 18:6 எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று.**

நாம் வாழும் பூமியிலே நம்மோடு வாழும் மனிதர்கள் எம்மிடம் அதிக பணம் இருக்கும் போது அல்லது அதிக பலம், சிறந்த அந்தஸ்து, உயர்கல்வி என மேன்மையான காரியங்கள் இருக்கும் போது எம்மோடு கூட இருப்பவர்கள் எங்களுடைய சத்தத்தைக் கேட்பார்கள், எமக்கு உதவி செய்வார்கள். ஆனால் நாம் வாழ்க்கையில் நெருக்கப்படுகின்ற வேளைகளில், பலதரப்பட்ட பிரச்சினைகள், வியாதிகள், நெருக்கடிகளுக்குள்ளாக கடந்து செய்கின்ற போது நம்மோடு முன் நின்ற மனிதர்களில் அநேகரைக் காணமுடியாது. ஆனால் எந்த நிலைமைகள் எம்முடைய வாழ்வில் வந்தாலும் எம்மோடு கூட இருப்பவர் ஒருவரே; 'அவர் தான் இயேசு கிறிஸ்து'. அதனாலே தான் தாவீது சொன்னார்; 'எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு' என்பதாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுல் ராஜா ஏறத்தாள 21 தடவைகள் தேவனுடைய மனுஷனாகிய தாவீதைக் கொலை செய்ய முயற்சிக்கின்றான். சில சந்தர்ப்பங்களிலே மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரம் மட்டும் தான் என்று சொல்லுமளவுக்கு சவுல் ராஜாவினால் தொடர்ந்து தேடப்பட்டுக் கொண்டிருந்தார்.

**1சாமுவேல் 23:25-28 (25.) சவுலும் அவன் மனுஷரும் தாவீதைத் தேடவருகிறார்கள் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் கன்மலையிலிருந்து இறங்கி, மாகோன் வனாந்தரத்திலே தங்கினான்; அதைச் சவுல் கேள்விப்பட்டு, மாகோன் வனாந்தரத்திலே தாவீதைப் பின் தொடர்ந்தான். 26. சவுல் மலையின் இந்தப்பக்கத்திலும், தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பக்கத்திலும் நடந்தார்கள்; சவுலுக்குத் தப்பிப்போக, தாவீது தீவிரித்தபோது, சவுலும் அவன் மனுஷரும் தாவீதையும் அவன் மனுஷரையும் பிடிக்கத்தக்கதாய் அவர்களை வளைந்து கொண்டார்கள். 27. அந்தச் சமயத்தில் ஒரு ஆள் சவுலிடத்தில் வந்து: நீர் சீக்கிரமாய் வாரும்; பெலிஸ்தர் தேசத்தின்மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்றான். 28. அதனால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதைவிட்டுத் திரும்பி, பெலிஸ்தரை எதிர்க்கும்படி போனான்; ஆதலால் அவ்விடத்திற்குச் சேலா அம்மாலிகோத் என்று பேரிட்டார்கள்.**

இங்கு ஒரு சம்பவம் நடைபெறுகின்றது. சவுல் தாவீதையும் அவன் மனுஷரையும்பிடிக்கத்தக்கதாக வளைந்து கொள்கிறான். தாவீதும் அவன் மனுஷரும் தப்பிக் கொள்வதற்கு எவ்வகையிலும் இடமில்லை. அந்த சமயத்தில் ஒரு ஆள் வந்து பெலிஸ்தர் தேசத்தின் மேல் படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்று சவுலுக்குச் சொல்ல, தாவீதையும் அவன் மனுஷரையும் தொடர்வதை விட்டு சவுல் பெலிஸ்தரோடு யுத்தம் பண்ண செல்கின்றான். இதனால் தாவீதும் அவன் மனுஷரும் காக்கப்படுகின்றார்கள்.

ஆம் எனக்கு அன்பானவர்களே, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நாமும் கூட பல காரியங்களினால் நெருக்கப்பட்டுக் கொண்டிருப்போம். உங்களுடைய பிரச்சினை எப்படிப்பட்டதாக இருந்தாலும் உங்கள் நெருக்கத்திலே தேவனை நோக்கிக் கூப்பிடுங்கள். தேவன் உதவி செய்வார். ஒரு வேளை உங்களுடைய பிள்ளைகளால் நீங்கள் நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கலாம் அல்லது பிள்ளைகள் பெற்றோராலே ஒடுக்கப்பட்டு, நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கலாம். உறவினர்களாலே அல்லது நம்பிய மனிதர்களாலே நெருக்கப்பட்டு வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். எப்படியாக இருந்தாலும் தேவனை நோக்கிப் பார்த்து அபயமிடுங்கள். இந்த ஆண்டிலே தேவன் உங்களை எல்லாவித நெருக்கத்திலிருந்தும் விடுவிப்பார்.

**11நாளாகமம் 15:4 தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பி, அவரைத் தேடினபோது, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார்.**

நாம் தேவனுக்கு விரோதமாக செய்த பாவத்தினாலே பல வேளைகளிலே நெருக்கப்பட்டுக் கொண்டிருப்போம். பிரியமானவர்களே இப்படியான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமைகளிலே எம் நெருக்கத்திலிருந்து நாம் வெளியே வர எம்முடைய பாவங் களை விட்டு நாம் வெளியே வரவேண் டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

**எரேமியா 8:4 நீ அவர்களை நோக்கி: விழுந்தவர்கள் எழுந்திருக்கிற தில்லையோ? வழிதப்பிப்போனவர்கள் திரும்புகிறதில்லையோ?**

வீதியிலே செல்லும் போது தவறுதலாக இடறி விழுந்த மனிதன் அப்படியே அதிலே தொடர்ந்து கிடப் பதில்லை. உடனடியாகவே எழுந்துவிடு வான். அதே போன்று செல்ல வேண்டிய பாதையைவிட்டுவிட்டு வேறு பாதையி னாலே மாற்றி பிரயாணம் செய்கின்ற மனுஷன் தான் பாதை மாறிவந்து விட்டேன் என்று அறிகின்ற போது திரும்பி சரியான இடத்திற்கு செல்ல துரிதப்படுகின்றான்.

ஆம் பிரியமானவர்களே, நாமும் நம்டுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் சில பாவங்களுக்குள்ளே அகப்படுகின் றோம். ஆனால் எத்தனை காலமாக அதே பாவத்திற்குள் தொடர்ந்து வாழுகின்றோம். எத்தனை காலமாக பாவத்தைவிட்டுவிட முடியாமல் அதற் குள்ளே சிக்குப்பட்டுக் கொண்டு நெருக் கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கி றோம்.

அன்பானவர்களே, எல்லாவித நெருக்கத்திலிருந்தும் வெளியே வரு வதற்கு விழுந்த இடத்திலிருந்து எழும்புவோம். சரியான வழிக்குத் திரும்புவோம். கடந்த ஆண்டிலே எம்மை சுற்றி நின்ற பலவிதமான நெருக்கங் களையும் வேதனைகளையும் இனந் தெரியாத பிரச்சினைகளையும் இல்லாமல் செய்து இந்த ஆண்டிலே தேவன் நமக்கு தம்மை வெளிப்படுத்துவார்.

உங்களுடைய நெருக்கத்திற்கு நீங்கள் தான் காரணம்; உங்களுடைய வாழ்க்கை தான் காரணம். உங்களுடைய வாயின் வார்த்தைகள் தான் காரணம். நீங்கள் துன்மார்க்கத்திற்கு ஒத்துப் போனமை தான் காரணம். எனவே மனந்திரும்பி கர்த்தரை தேடுங்கள். தேவன் உங்களை எல்லாவித நெருக் கத்திலிருந்தும் வெளியே கொண்டு வருவார்.

இந்த ஆண்டை உங்களுக்கு ஆசீர்வாதமான, சஞ்சலமில்லாத நாட் களாக மாற்றித்தருவாராக. ஆமன்.





**சரியான விடை எழுதியவர்களில்**
**பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 106**
எஸ்.டிலக்சனா
(அனலைதீவு)

**குறுக்கெழுத்துப் போட்டி - 104**
பெனான்டோ ஜெசிதரன்
(யாழ்ப்பாணம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | 02 | |
| | | | | | | 04 | | |
| | 05 | | | | | | | |
| | | | | | 06 | | | |
| | 07 | | | | | | | |
| 08 | | | | | | | | |
| | 09 | | | | | | | |
| | | | | | | 10 | | |
| 11 | | | | | | | | 12 |

## இடமிருந்து வலமாக

## குறுக்கெழுத்துப் போட்டி 105

01. செருயாவின் குமாரரில் ஒருவன்
05. நீதிமான்களின் ............ மகிழ்ச்சியாகும்; துன்மார்க்கருடைய அபேட்சையோ அழியும்
07. 3000 நீதிமொழிகளைச் சொன்னவன்
08. நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன் என அவ்விடத்துக்கு பெனியேல் என பெயரிட்டவன்
09. சிசெரா குடியிருந்த பட்டணம்
11. யோவாசின் ஸ்தானத்தில் ராஜாவானவன்

## வலமிருந்து இடமாக

03. எருசலேமில் ஆட்டுவாசலினருகே இது இருக்கின்றது
04. மிகாயாவை கன்னத்தில் அடித்தவன்
06. கர்த்தருடைய ......... நித்திய காலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்
10. ஆகார் இவ் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள்
12. தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவன்

## மேலிருந்து கீழாக

01. ஏசாயாவின் தந்தை
02. யோப்பா பட்டணத்தின் ஒரு சீஷி
03. இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிய கோத்திரம்

## கீழிருந்து மேலாக

10. யோவான் இங்கே ஞானஸ்நானங் கொடுத்தான்
11. 'நான் அரசாளுகிறதற்கு இஸ்ரவேலரெல்லாரும் என்மேல் நோக்கமாயிருந்தார்கள்' எனக்கூறியவன்
12. ஆகாகை உயிரோடே பிடித்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ போதகர் வை.தேவதாஸ்




**எ**னக்கு அருமையானவர்களே! வழமை போன்று ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் இவ் வருடத்தின் வெளிப்பாடு என தேவ ஊழியர்களும், உலக ஞானிகளும் பல காரியங்களை கூறுவதுண்டு. சிலர் தாங்களுக்குள் இருக்கும் குறி சொல்லும் ஆவியின் தூண்டுதலினால் சில குறிகளை சொல்வதுமுண்டு.

**ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்; நாம் குறிகளை நம்பி அலைகின்ற கூட்டம் அல்ல, மாறாக தேவ வல்லமையையும் கிருபைகளையும் விசுவாசிக்கும் தேவ ஜனங்கள்.**

ஆகவே இவ் அனல் சஞ்சிகையின் வாலிபர் பகுதியில் நாம் தியானித்து வருகின்ற சிம்சோனின் வாழ்க்கையின் தொடரை இவ் இதழில் நான் பகிர்ந்து கொள்ளாமல் இவ் வருடத்திலும் தேவ சமூகத்தில் 'நாம் விசுவாசிக்க வேண்டிய ஓர் வாக்குத்தத்தையும் அவ் வாக்குத்தத்தை சுதந்தரிக்க நாம் செய்ய வேண்டிய அர்ப்பணங்களைக் குறித்தும்' இப் பகுதியில் பேச விரும்புகிறேன். நிச்சயம் கர்த்தர் உங்களோடு இடைபடுவாராக.

புதிய ஆண்டில் பிரவேசித்தாலும் புதுவருடமே என்ற ஒரு சந்தோஷமும் இல்லாமல் ஓர் நம்பிக்கையற்ற நிலையில் நீங்கள் இருப்பதனை தேவன் அறிவார். 'இனி என் வாழ்க்கையில் நான் ஒரு சந்தோஷத்தையும் காணமுடியாது. எனக்கு இவ்வளவு தான் அளக்கப்பட்டுள்ளது. என் வாழ்வில் வெளிச்சத்தின் ஒளிக்கீற்றுக்களை நான் ஒரு போதும் காணமுடியாது' என நினைக்கின்றீர்களா? யோபு சொல்கிறார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோபு 14:7 ஒரு மரத்தைக்குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப் போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்.**

பாருங்கள் வெட்டிப்போடப்பட்ட மரமாக இருந்தாலும் அது துளிர்விடும் என நம்பலாம். ஆனால் என் வாழ்க்கை துளிர்விடுமா? நான் திரும்பவும் தலை நிமிர முடியுமா? நான் திரும்பவும் தேவனின் ஊழியத்தைச் செய்ய முடியுமா? திரும்பவும் என் வாழ்வு ஆசீர்வதிக்கப்படமுடியுமா?... இப்படி பல கேள்விகளோடும், நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் காணப்படுகிறீர்களா?

இந்த தேவ செய்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் கதைத்த ஆண் மகன் கண்ணீரோடு கதறினான். *போதகரே... என் குடும்ப வாழ்வே சிதைந்துவிட்டது. என் மனைவி என்னைவிட்டுப்பிரிந்து தூரம் போய்விட்டாள். எப்படியாவது நீங்கள் ஜெபம் செய்து எங்கள் குடும்பம் ஒன்று சேர பிரயாசப்படுவீர்களா?* என அழுதார்.

பாருங்கள் அருமையானவர்களே, நம்பிக்கை சிதைவடைந்த நிலையில் அம் மனிதன் காணப்பட்டார். இப்படி பல சூழ்நிலைகளால் நீங்கள் தாக்கப்பட்டு நம்பிக்கை யற்ற நிலையில் காணப்படுகிறீர்களா? அல்லது ஒரு வேளை இந்த ஆண்டிலும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளுக்குள் நீங்கள் கடந்து போக வேண்டிய நிர்ப்பந்தமான நிலைகூட உங்கள் வாழ்வில் ஏற்படலாம்.

ஆகவே இந்த வருடத்திலும் நீங்கள் விசுவாசிக்க வேண்டிய ஓர் வாக்குத்தத்தை தேவ சமூகத்தில் இருந்து உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்

பரிசுத்த வேதம் சொல்கிறது; **ஏசாயா 58:8 உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்.**

நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அல்லது அப்படியான சூழ்நிலைகளை இந்த வருடத்தில் நீங்கள் சந்திக்க நேரிடலாம். அப்பொழுதெல்லாம் தேவன் உங்களுக்குத் தந்திருக்கும் இந்த வாக்குறுதியை மறக்கவேண்டாம். ஆம் 'உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்' இதை வாசிக்கும் பொழுதே கரத்தை உயர்த்தி ஆமென் சொல்லுங்கள்.

என் சுகவாழ்வு விரைவாக துளிர்க்கும் என இப்பொழுதே சத்தமாக அறிக்கையிடுங்கள். ஆம் நிச்சயம் உங்கள் சுக வாழ்வு துளிர்க்கும். அதனை சீக்கிரமாக நீங்கள் காண்பீர்கள்.

வேதாகம சரித்திரத்திலும் சரி, தற்கால பரிசுத்தவான்களின் சரித்திரத்திலும் சரி நம்பிக்கை இழந்த சூழ்நிலையிலும் மறுபடியும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் வரலாறு அதிகமாகும். விழுந்து போன எத்தனையோ நபர்களின் வாழ்க்கையை தேவன் நிலைநிறுத்தி ஆசீர்வதித்துள்ளார். ஏனெனில் அவர்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆமோஸ் 9:12 அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.**

விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை திரும்ப எடுப்பிக்கிற தேவனாக இருக்கிறார். எனவே நிச்சயம் உன் வாழ்க்கையையும் அவர் ஆசீர்வதிப்பார்.

வேதாகம சரித்திரத்தில் தன் வாழ்க்கையின் அனைத்து நம்பிக்கை களையும் இழந்து, பட்டுப்போன நிலையில் இருந்த மகள் ஒருத்தி மறுபடியும் துளிர்விட்டு, பூப்பூத்து, கனிகளைக் கொடுத்ததை உங்கள் முன் சாட்சியாக வைக்க விரும்புகின்றேன்.

ஆம் அந்த ஸ்திரீ யார்? அவள் தான் ரூத். ரூத்தின் வாழ்க்கை உங்கள் அனைவருக்கும் தெரியும். அவள் தன் வாழ்க்கையின் சந்தோஷத்தை இழந்து தனி மரமானாள். இளம் வயதிலேயே தன் கணவனைப் பறிகொடுத்து விதவையானாள். அவளுடைய வாழ்க்கை ஓர் பட்டுப்போன மரத்தைப் போன்றது. இருப்பினும் அவள் எடுத்த பல சிறப்பான தீர்மானங்கள் அவள் வாழ்க்கையை துளிர்விடப்பண்ணியது.

இன்றைக்கும் நீங்கள் எடுக்கும் தீர்மானங்களே உங்கள் வாழ்க்கையை துளிரப்பண்ணும்.

சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும் என சொன்ன தேவன் நிச்சயம் உங்கள் வாழ்க்கையை இந்த வருடத்திலும் துளிர்விடப்பண்ணுவார். நீங்களே கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக நல்ல தீர்மானங்களை எடுத்து செயற்படுத்துங்கள். நிச்சயம் அற்புதத்தைக் காண்பீர்கள்.

ரூத் பல தீர்மானங்களை எடுத்தாள். அவையெல்லாவற்றையும் குறித்து நான் எழுதவில்லை. அத்தோடு அவள் தீர்மானங்களை ஒழுங்கு முறையிலும் நான் உங்களோடு பகிர்ந்து கொள்ளவில்லை. மாறாக ஒரு சில தீர்மானங்களை ஒரு சில ஒழுங்கு முறையோடு உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

## ரூத் எடுத்த தீர்மானங்கள்

### 01. குடும்ப உறவுகளை பாசத்துடன் நேசிப்பதற்கு தீர்மானம் பண்ணினாள்.

பாருங்கள் பிரியமானவர்களே! 'ரூத்தையும், நகோமியையும் இணைப்பதற்கு ஏதுவான மனிதர்களோ; அல்லது மழலைச் செல்வங்களோ இல்லாதிருந்தும் தன் மாமியாரை மிகுந்த பாசத்துடன் நேசிக்கும் ஓர் உன்னத உறவாக' ரூத் காணப்பட்டாள்.

எனது கணவன் இறந்து போனாலும், கணவனின் உறவாக எனக்கென்றொரு பிள்ளை இல்லாதிருந்தாலும், எனக்கென்று தேவன் ஏற்படுத்திய குடும்ப உறவை நான் வெறுக்கமாட்டேன் என்பதில் ரூத் உறுதியான தீர்மானமாக இருந்தாள். **ரூத் 1:16 அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப்போ, திரும்பிப்போ என நகோமி மறுபடியும் மறுபடியும் சொன்னாலும் நகோமியைவிட்டு நான் திரும்பிப்போவதில்லை என்ற தீர்மானத்தில் ரூத் உறுதியாக நின்றாள்.

அவளது வாழ்வு முழுவதும் பட்டுப்போன நிலையிலும் தன்னைப் போல் எல்லாவற்றையும் இழந்த மாமியை நான் தனியே தவிக்கவிடக்கூடாது என்ற அன்புள்ள மருமகளாக ரூத் காணப்பட்டாள்.

இதனை வாசிக்கின்ற சகோதரர்களே! சகோதரிகளே! உங்களுக்கு என்று இந்த நிலையில்லாத உலகத்திலே தேவன் சில குடும்ப உறவுகளை ஏற்படுத்தி தந்துள்ளார். எந்த நிலமை வந்தாலும் குடும்ப பாசத்தை மறவாதிருங்கள்.

மாமன் - மருமகன், மாமி — மருமகள், கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், சகோதரன் - சகோதரி என பல உறவுகள் உங்களை சூழக் காணப்படுகின்றது. இவ் உறவுகளை உண்மையான பாசத்துடன் நேசியுங்கள். இந்த வருடத்திலும் போலியான அன்பில் இருந்து உண்மையான அன்பின் நிலைக்கு வாருங்கள்.

யோபுவின் மனைவியின் வார்த்தைகளைப் பாருங்கள்.

**யோபு 2:9 அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்.**

வேதனையின் நேரத்தில் கணவனைத் தேற்ற வேண்டிய மனைவி கணவனை அருவருத்தாள்; வெறுத்தாள்; தற்கொலை செய்து இறந்துவிடு என புலம்பினாள்.

இருப்பினும் யோபு தன் மனைவியை உண்மையாக நேசித்தார். சண்டைகள், சச்சரவுகளை ஒதுக்கி தள்ளி விடுங்கள். வீண் வார்த்தைகள் பேசுவதை நிறுத்தி விடுங்கள். உண்மையாய் ஒருவரை ஒருவர் நேசியுங்கள்.

ஏசாயா தீர்க்கதரிசி சொல்வதைப் பாருங்கள்;

**ஏசாயா 8:18 இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.**

இந்த வருடத்திலும் கூட குடும்பம் முழுவதுமே கர்த்தரின் நாமத்தின் மகிமைக்கு அடையாளங்களாவும், அற்புதங்களாகவும் காணப்படவேண்டும் என்ற வாஞ்சையோடு செயற்படுங்கள். குடும்ப உறவுகளை சிதைக்க வேண்டாம். யாரையும் ஒதுக்கி வைக்க வேண்டாம்.

**ரூத்தைப் போல், உண்மையான அன்பைக் காட்டுங்கள். உங்கள் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்ப்பதனை நீங்கள் காண்பீர்கள்.**

**ரூத்தின் அடுத்த தீர்மானத்தைப் பார்ப்போம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. தேவ ஜனங்களை நேசிப்பதற்கு தீர்மானம் பண்ணினாள்.

உங்களுக்கு தெரிந்திருக்கிறபடி ரூத் யூத இனம் அல்ல; மாறாக அவள் ஓர் மோவாபிய பெண்மணி. முன்பு அவள் நேசித்தது எல்லாம் மோவாபிய இனம். ஆனால் எப்பொழுது தேவனைக் கண்டு கொண்டாளோ அன்றிலிருந்து அவள் ஓர் தீர்மானத்தை எடுத்தாள் 'நான் தேவ ஜனங்களைத் தான் நேசிப்பேன்.

**ரூத் 1:16 உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்.**

ரூத் தன்னுடைய மாமியை மட்டுமல்ல; ஒவ்வொரு தேவ ஜனங்களையும் நான் மனமார நேசிப்பேன் என்ற தீர்மானம் பண்ணினாள்.

இதனை வாசிக்கின்ற தேவ பிள்ளையே! உங்கள் வாழ்வும் சீக்கிரம் துளிர்விடும். ஆனால் நீங்கள் நிச்சயம் தேவபிள்ளைகளை நேசித்தே ஆக வேண்டும். இன்றைய அவசர உலகில் யாரையும் யாரும் கண்டு கொள்வதில்லை. தர்மம் என்ற பெயரில் முடிந்தால் சில பண உதவிகளை மட்டும் செய்துவிட்டு உண்மையான தேவ பிள்ளைகளுடன் ஐக்கியம் கொள்ளாமல், நாம் உண்டு; நம்முடைய குடும்பம் உண்டு என்று ஓடிக்கொண்டிருக்கிறோம்.

தேவ மனுஷனாகிய தாவீது சொல்வதைப் பாருங்கள்.

**சங்கீதம் 119:63 உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன்.**

தேவனிடம் அன்பாயிருக்கிறவன் தேவனுடைய மக்களிடம் அன்பாய் இராமல் இருக்க முடியாது. பிரியமானவர்களே உங்களுக்கு என்றொரு வட்டத்தை அமைக்காமல் தேவ ஜனங்களோடு நட்புக் கொள்ள முயற்சியுங்கள். கூடிய அளவு உலக மக்களின் நட்டைக் குறைத்து தேவ ஜனங்களின் நட்பை பெருக்கிக் கொள்ளுங்கள்.

இதனை எழுதுகின்ற நான் எனது சொந்த அனுபவத்தில் ஒன்றை சொல்ல முடியும். அதாவது அனேக தேவ பிள்ளைகள் மற்ற தேவபிள்ளைகளோடு நட்பாய் இருப்பதைப் பார்க்கிலும் உலக மக்களோடு நட்பாய் இருப்பதையே அதிகமாக்கிக் கொண்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தான விடயமாகும்.

உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் என்று சொல்லும் நிலைக்கு நாம் வரவேண்டும்.

**1சாமுவேல் 18:1 அவன் சவுலோடே பேசி முடிந்தபின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான்.**

சாதாரணமான ஆடு மேய்க்கும் ஒருவனை ஒரு அரசிளங்குமரன் நேசித்தான். காரணம் ஒன்றே ஒன்று தான். அவன் தேவனுக்குப் பயந்து அவரது கட்டளைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீழ்ப்படிகிற தாவீதுக்கு யோனத்தான் சிநேகமாயிருக்க முடிவெடுத்தான். மாத்திரமல்ல சக தேவ மனிதனை உயிரைப் போல நேசித்தான்.**

யோனத்தான் தாவீதின் மேல் வைத்த பாசத்தை சூழ்நிலைகளாலோ, குடும்பத்தினாலேயோ, பதவியினாலேயோ வேறு எந்த சூழ்நிலையினாலோ பிரிக்க முடியவில்லை.

தனக்கு வரவேண்டிய அரச பதவி தாவீதுக்கு கிடைக்கப்போகிறது என்பதை அறிந்த பின்னரும் யோனத்தான் தாவீதை நேசித்தான்.

காரணம் தேவ மனிதன் தேவ மனிதனை நேசிப்பான். குறிப்பாக இவ் வருடத்திலும் தேவ ஜனங்களோடு சேர்ந்து ஆராதிப்பதை நிறுத்திவிடாதிருங்கள்.

ஆளுக்கு ஆள் ஜெபித்துவிட்டு, சபையோடு சேர்ந்து ஜெபிப்பதை இன்று பலர் புறக்கணித்து வருவதைக் காணமுடிகின்றது. காரணம் கேட்டால், ஆதியிலிருந்து சபைகள் வீடுகளிலேயே கூடின என விளக்கமும் கூறுவார்கள்.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்; ஆதியிலே வீடுகளில் கூடியது உண்மைதான். ஆனால் தனித்தனி குடும்பமாக அல்ல; ஒரு கூட்ட தேவஜனங்களாக ஒன்று கூடினார்கள் என்பதை மறக்க வேண்டாம்.

**எபிரெயர் 10:25 சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.**

சபை கூடிவருதலானது நாம் நமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஓர் நற்பழக்கமாகும். அதில் நாம் ஒரு போதும் எக் காரணத்தைக் கொண்டும் தவறக்கூடாது.

ரூத்தைப் போல் உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் என்ற தீர்மானத்திற்குள் வாருங்கள். நிச்சயம் உங்கள் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்.

ரூத் எடுத்துக் கொண்ட அடுத்த தீர்மானத்தைப் பார்ப்போம்.

## 03. ஜீவனுள்ள தேவனை நேசிக்க தீர்மானம் பண்ணினாள்

ரூத்தைப்பாருங்கள்; குடும்ப உறவை நேசித்தாள், தேவ ஜனங்களை நேசித்தாள் மட்டுமல்ல அந்த தேவாதி தேவனையே முழுமையாக நேசிப்பதற்கு தன்னை அர்ப்பணித்தாள்.

**ரூத் 1:16 உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.**

ரூத்திற்கு தேவனைவிட்டு பிரிய மனம் வரவில்லை. அவர் தான் என்னுடைய தேவன் என்பதில் அவள் உறுதியாக நின்றாள்.

இதனை வாசிக்கின்ற அன்பரே! ஓர் நல்லதும் மேன்மையானதுமான தீர்மானத்தை எடுப்பீரா! **"இயேசுவே என்னுடைய தேவன்".**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏசாயா 26:3 உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்.** கர்த்தரையே நம்பி அவரையே உறுதியாகப் பற்றிக் கொள்வாயானால் பூரண சமாதானம் நிச்சயம் பெறுவாய்.

இன்று அனேகம் தேவ ஜனங்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். விசுவாசக் கப்பலை சேதப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். **யோவான் 6:66 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள்.** பின்வாங்கிப் போகிறவர்களுக்கு அந்திக் கிறிஸ்து இடும் அடையாள எண் 666 ஆகும்.

யோவான் 6:66 சொல்கிறது: அனேகர் அவரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள். தேவனைவிட்டுப் பின்வாங்கக்கூடிய இருதயம் உங்களுக்குள் இராதபடி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

அன்புள்ள தேவனாகிய இயேசு உங்களைப் பார்த்து என்ன கேட்கிறார் தெரியுமா? **யோவான் 6:67 அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.** என்னைவிட்டு தூரம் போகாதிருங்கள் என்று அன்போடு தேவன் உனக்குச் சொல்கிறார்.

யோபு சொன்னதைப் போல; **யோபு 13:15 அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்.** என்ற மகத்தான நிலைக்கு யோபு வந்தார். நீங்களும் ஓர் தீர்மானம் பண்ணுங்கள். தேவனே நான் உம்மையே நம்புவேன்.

தாவீது என்கிற தேவ மனிதன் யூதாவின் வனாந்தரத்திலே உயிரைக் காப்பாற்ற அலைந்து திரிந்து கொண்டிருந்தார். எங்கு பார்த்தாலும் வறண்ட பூமி. நம்பிக்கையற்ற நிலை வனாந்தர அனுபவம். இந்த நிலையிலும் அவர் தேவனைக் குறித்து என்ன சொல்கிறார் என்பதை கவனித்துப் பாருங்கள்.

**சங்கீதம் 63:1 தேவனே, நீர் என்னுடைய தேவன்.**

'தேவனே நீர் என்னுடைய தேவன்' என்ற தனிப்பட்ட உரிமை பாராட்டி அறிக்கையிடுவதைக் காண்கிறோம்.

ஆம் வாசகர்களே! ரூத், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று சொன்னது போல; தாவீது, தேவனே நீர் என்னுடைய தேவன் என்று சொன்னது போல நீங்களும் சொல்லுங்கள்; **"தேவனே நீர் என்னுடைய தேவன்".**

குடும்பத்தை நேசிக்கவும், தேவ ஜனங்களை நேசிக்கவும், தேவனை நேசிக்கவும் தீர்மானம் பண்ணின ரூத்தை தேவன் அதிகமாக ஆசீர்வதித்தார்.

அவள் நினைத்துப் பார்க்க முடியாத அற்புதங்களை தேவன் செய்தார். அவளுக்கு போவாஸ் மூலமாக மறுவாழ்வை தேவன் கொடுத்தார். ஓபேத் என்கிற குழந்தையைக் கொடுத்து தேவன் அவளைக் கனப்படுத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருக்கு பிரியமாக ரூத் வாழ்ந்தபடியால் இஸ்ரவேலின் மாபெரும் அரச பரம்பரையும், தேவனுடைய குமாரனும் அவள் சந்ததியில் தோன்ற தேவன் உதவி செய்தார்.

பட்டுப்போன ரூத்தின் வாழ்க்கை துளிர்விட்டது. உன் வாழ்வும் நிச்சயம் துளிர்விடும். **ஏசாயா 58:8 உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து.**

இப் பகுதிக்கு இன்னுமொரு அர்த்தமுண்டு "நீ விரைவில் சுகமடைவாய்".

தேவ பிள்ளையே உன் வாழ்க்கை செழிப்பது மட்டுமல்ல, உனக்கு சரீர சுகத்தையும் தேவன் வாக்குப்பண்ணுகிறார். 'நீ விரைவில் சுகமடைவாய்' இந்த வருடமானது உன் வாழ்வு துளிர்விடுகிற வருடமாக இருப்பதாக.

இன்னொரு காரியத்தையும் தேவ சமூகத்தில் இருந்து பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரியனாகிய ஆரோனுக்கு விரோதமாக இஸ்ரவேலர் முறுமுறுத்தார்கள். ஆரோனையும் லேவி கோத்திரத்தையும் புறக்கணிக்க முயற்சி எடுத்தார்கள்.

ஆனால் தேவனோ ஆசாரியத்துவம் நிலைநிறுத்தப்படுவதற்காக எதிர்ப்புகளை அகற்றி, ஓர் அற்புதத்தின் மூலம் ஆசாரியத்துவத்தை உறுதிப்படுத்தியதை எண்ணாகமம் 16, 17ஆம் அதிகாரங்களில் வாசிக்கிறோம். குறிப்பாக,

**எண்ணாகமம் 17:8 மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்த போது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது.**

தேவனுக்காக உண்மையாக ஊழியம் செய்யும் ஒவ்வொரு ஊழியர்களின் வாழ்வும் இந்த வருடம் துளிர்விடுவதை நீங்கள் காண்பீர்கள்.

உண்மையான ஊழியங்களுக்கும்; பொய்யான ஊழியங்களுக்கும் வித்தியாசம் காண்பீர்கள்.

எது எப்படியோ "உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்"

☞ தேவன் தந்த குடும்ப உறவுகளை நேசியுங்கள்.

☞ தேவ ஜனங்களை, சபையை நேசியுங்கள்.

☞ தேவாதி தேவனை நேசியுங்கள்.

விரைவில் உங்கள் சுக வாழ்வு துளிர்க்கும்.

விரைவில் நீங்கள் சுகம் பெறுவீர்கள்.

---

*குறிப்பு: அன்பின் வாசகர்களே தற்போது ஏற்பட்டுள்ள அச்சிடல் செலவு அதிகரிப்பு மற்றும் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக 2022ஆம் ஆண்டு தொடக்கம் சந்தாப்பணத் தொகைகள் சற்று அதிகரிக்கப்பட்டுள்ளது, என்பதுடன் அதனை சந்தா விபரப்பகுதியில் பார்வையிடுமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன். - ஆசிரியர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து...



❑ திருமதி. J.பிலிப்




அன்பான சகோதரிகளே, புதிய ஆண்டின் பெண்கள் பக்கத்தில் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு **'என் நாமத்திற்கு பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்'** என்ற வாக்குப்படி தேவன் நம் எல்லோரையும் பாதுகாத்தார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாகட்டும்.

கடந்த ஆண்டு நாம் பொன், வெள்ளி, பணம் போன்றவற்றை பத்திரப்படுத்தி இருக்கலாம். ஆனால் நாம் பத்திரப்படுத்த வேண்டிய காரியம்; "தேவ கட்டளை" என்று வேதம் எமக்கு கற்றுக் கொடுக்கிறது.

**நீதிமொழிகள் 7:1b என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.**

எமக்கும் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஸ்தானங்களும் நியமிக்கப்பட்டுள்ளது. நாம் கட்டளைகளையும், ஸ்தானங்களையும் பத்திரப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பிள்ளை என்ற ஸ்தானம், மனைவி என்ற ஸ்தானம், அம்மா என்ற ஸ்தானம், பாட்டி என்ற ஸ்தானம் என தேவன் எமக்கு பல ஸ்தானங்களைக் கொடுத்திருக்கிறார். இதை வாசிக்கும் சகோதரியே நீ இன்றைக்கு எந்த ஸ்தானத்தில் இருக்கிறாய்? நீ இருக்கும் ஸ்தானத்தில் தேவ கட்டளைகளை பத்திரப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஏனென்றால், **நீதிமொழிகள் 27:8 தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான்.**

## 01. பிள்ளை என்ற ஸ்தானம்

முதலாவது பிள்ளை என்ற ஸ்தானத்தில் இருக்கும் சகோதரியே நீ கைக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய கட்டளை; **எபேசியர் 6:1 பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம்.** இன்று அனேக பிள்ளைகள் இக் கட்டளையை மறந்து, தம்முடைய சொந்த எண்ணத்தில் தீர்மானங்களை எடுத்து அலைகின்ற குருவியைப் போல் இருக்கிறார்கள். இதை வாசிக்கும் பிள்ளையே; **எஸ்தர் 2:20b எஸ்தர் மொர்தெகாய் இடத்திலே வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோல, இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்துவந்தாள்.** சொற்கேட்டு நடந்தபடியால் அவள் பட்டத்து ஸ்திரீயானாள். அன்பான பிள்ளையே தேவனுடைய கட்டளையை பத்திரப்படுத்தி நடந்தால் எஸ்தர் போல உன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடந்தால், உன்னை யும் கர்த்தர் எஸ்தர் போல ஆசீர்வதிப்பார் என்பதை மறந்து போகாதே.

## 02. மனைவி என்ற ஸ்தானம்

அடுத்து மனைவி என்ற ஸ்தானத்தில் இருக்கும் சகோதரியே நீயும் பத்திரப்படுத்த வேண்டிய ஒரு கட்டளை உண்டு. **எபேசியர் 5:22 மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். ஆதியாகமம் 12:1 கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.** ஆபிரகாம் கர்த்தர் சொன்னபடி புறப்பட்டுப் போனான். சாராள் எந்தக் கேள்வியும் அவ்விடத் தில் எழுப்பவில்லை. தேவ கட்டளைக்கு கணவனும் – மனைவியும் புறப்பட்டார்கள்.

அதுமட்டுமல்ல, விருந்தினர்கள் பகலின் உஷ்ண வேளையில் வந்த போது ஆபிரகாம் அப்பம் தரும்படி கூறினான். எந்த மறு உத்தரவும் சாராளினால் கூறப்பட்டதாக குறிப்பிடப்பட வில்லை. கணவன் சொன்னபடி செய்தாள். பெற்ற ஆசீர்வாதம் என்ன? ஆபிரகாமும் சாராளும் முதிர்வயதாய் பிள்ளைகள் இல்லாதவர்களாய் இருந்தார்கள். தேவ கட்டளையை சாராள் பத்திரப்படுத்தியதால் பெற்ற ஆசீர்வாதம் ஈசாக்கு.

## 03. அம்மா என்ற ஸ்தானம்

அம்மா என்ற ஸ்தானத் தில் இருக்கும் சகோதரியே, உன் விண்ணப்பங்கள் கேட்கப் பட வேண்டும் என்றால் நீயும் பத்திரப்படுத்த வேண்டிய கட்டளை உண்டு. **சங்கீதம் 65:2 ஜெபத்தைக் கேட்கிற வரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.** என்றபடி அன்னாள் கர்த்தரு டைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணினாள் (1சாமுவேல் 1:12), இந்தப்பிள்ளைக் காக விண்ணப்பம் பண்ணி னேன், நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார் (1சாமு வேல் 1:27)

ஜெபிக்க வேண்டும் என்ற கட்டளையை பத்திரப் படுத்தி ஜெபித்த அன்னாள் பதிலை அவள் கண்கள் கண்டது. உன் கண்களும் அன்னாளைப் போல பதிலைக் காண வேண்டும் என்று விரும்புகிறதா? ஜெபிக்க வேண்டும் என்ற கட்டளையை பத்திரப்படுத்தி செயற்படு; உன் கண்களும் அதிசயங்களைக் காணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. பாட்டி என்ற ஸ்தானம்

பாட்டி என்ற ஸ்தானத்தில் இருக்கும் சகோதரியே, வாழ்க்கையிலே எல்லா கட்டங்களையும் கடந்து வந்துவிட்டேன், இனி பத்திரப்படுத்த வேண்டிய கட்டளை ஒன்றும் எனக்கு இல்லையே என்று யோசிக்கிறாயா? உனக்கும் பத்திரப்படுத்தி செயற்படுத்த வேண்டும் என்று விரும்பும் ஒரு கட்டளை உண்டு. **11தீமோத்தேயு 1:5 அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது: அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.** பாட்டியே தேவன் மேல் நீ வைத்திருக்கும் விசுவாசத்தை பத்திரப்படுத்தி உன் பரம்பரைக்கு அதைக் கடத்த வேண்டும் என்ற கட்டளையை தேவன் உனக்கு கொடுத்திருக்கிறார்.

**நீதிமொழிகள் 17:6 பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம்.** புதிய ஆண்டுக்குள் வந்திருக்கும் சகோதரியே நீ இருக்கும் ஸ்தானத்தை சற்று சிந்தித்து தேவ வார்த்தையின்படி தேவ கட்டளைகளுக்கு உன்னை பத்திரப்படுத்தி நடந்தால் தேவ ஆசீர்வாதம் இவ் ஆண்டு உனக்கும் உண்டு.

**நீதிமொழிகள் 6:23 கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவவழி. நீதிமொழிகள் 4:4 அவர் எனக்குப் போதித்துச் சொன்னது: உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக் கொள்ளக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.**



## வினா விடை - 107

01. பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை பிடித்துக் கொண்டு போய் வைத்த கோவில் எது?

02. தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துவந்த இருவர் யார்?யார்?

03. 'ராஜாவே நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரியும்' என்று சொன்னவன் யார்?

04. தன் புதுச்சால்வையை பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போட்டவன் யார்?

05. செட்டையினால் பறந்து வந்த இரண்டு ஸ்திரீகளைக் கண்டவன் யார்?

06. பஸ்கா பலிக்காக முப்பதினாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் மூவாயிரம் காளைகளையும் கொடுத்த ராஜா யார்?

07. பன்றிகளை மேய்த்து வந்தவர்கள் யார்? யார்?

08. பால் குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலி செலுத்தினவன் யார்?

09. சாலொமொன் ராஜா உண்டாக்கின சிலைகளை உடைத்து, விக்கிரகத் தோப்புக்களை சுட்டெரித்து நிர்மூலமாக்கின ராஜா யார்?

10. பெலிஸ்தர் சவுலின் ஆயுதங்களைக் கொண்டுபோய் வைத்த கோவில் எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ ஜசிந்தா அக்கா




தெருவில் வசிக்கும் நாய்கள் குளிர்காலத்தில் உடலை சுருட்டிக் கொண்டு நடுங்கிய வண்ணம் படுத்துக் கொண்டிருப் பதைப் பார்க்கலாம். பார்க்கவே பரிதாபமாக இருக்கும். அதிகமாய் நடுங்கிக் கொண்டிருந்த நாய் ஒன்று என்ன குளிர், காலைப் பொழுது விடிந்ததும் முதல் வேலையாய் கடைக்குச் சென்று நல்ல ஒரு போர்வை வாங்க வேண்டும். இந்தக் குளிர் பிரச்சினை இன்றோடு முடிந்தது. இராத்திரியிலிருந்து ஐயா... போர்வையைப் போர்த்திக் கொண்டு ராஜா மாதிரி நித்திரை கொள்ளப்போகிறேன்' என்று விடியும் வரை அடிக்கடி விழித்தெழுந்து இதையே சொல்லிக் கொண்டிருக்கும்.

காலையில் கண் விழித்தெழுந்ததும் சோம்பல் முறித்து சுற்றிலும் பார்க்கும். வயிற்றுக்கு ஏதாவது போட்டிட்டு நேர போர்வை விற்கின்ற கடையில தான் போய் நிற்கப்போகிறேன். நல்ல போர்வையாய் வாங்கி, இராத்திரியில இனிக் குளிரே இல்லாமல் நல்ல கதகதப்பாக நித்திரை கொள்ளப்போகிறேன், என்று சொல்லிக் கொண்டே குப்பைத் தொட்டிக்கு ஓடும். கிடைத்ததை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே வேறு தெருவில் இருக்கும் நாய் ஒன்று இதன் எல்லைக்குள் தென்படும்.

'எவன்டா அவன் என்ட ஏரியாவிற்குள்ள?' என்று சொல்லிக் கொண்டு உறுமியபடியே அந்த நாயைத் துரத்தி, கடித்து, ஒரு வழியா அதைத் துரத்திவிட்டு, யாரிட்ட... இம்.... என்றபடியே மீண்டும் குப்பைக்குத் திரும்பும். ஆ...ஆ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சாப்பாடு, நல்ல ருசி சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே வேறொரு நாய் போட்டிக்கு வரும். மீண்டும் சண்டை, கடிகள், காலை மதியம் என எல்லா குப்பைத் தொட்டிகளிலும் சண்டைகளிலே அந்த நாள் கழிய மீண்டும் இரவு வரும். குளிர் வாட்டும். மீண்டும் மனதிற்குள் சொல்லிக் கொள்ளும்.

பொழுது விடிந்ததும் நாளைக்கு முதல் வேலையாக கடைக்குப் போய் போர்வை ஒன்று வாங்க வேண்டும். நன்றாக கதகதப்பாக நித்திரை கொள்ள வேண்டும். என்ன முக்கிய வேலை இருந்தாலும் எல்லாமே போர்வை வாங்கியதற்குப் பின்பு தான். மீண்டும் விடியும்; குப்பைத் தொட்டி, சண்டை, உறுமுதல், கடி, விரட்டுதல்... மீண்டும் இரவு. அதே தீர்மானந்தான்.

**ஆனால் அது நிறைவேறாத தீர்மானம்.**

இயேசப்பாவிற்கு பிரியமான பிள்ளைகளே உங்கள் தீர்மானம் எப்படி இருக்கிறது? புதிய ஆண்டுக்குள் வந்திருக்கிறீர்கள். எத்தனைபேர் புதிய தீர்மானம் எடுத்திருக்கிறீர்கள்? ஒழுங்காக வேதம் வாசித்து ஜெபிப்பேன். பெற்றோருக்கு கீழ்ப்படிவேன் என்றும் இன்னும் பல தீர்மானங்கள் செய்திருப்பீர்கள். அவற்றை செயல்படுத்த ஆரம்பித்துவிட்டீர்களா? அல்லது நாயின் தீர்மானம் போன்று இருக்கிறதா? இயேசு வரும் நேரம் மிக மிக நெருங்கிவிட்டது. அப்பா இயேசுவைப் பார்க்க ஆயத்தமா? தீர்மானங்களை நிறைவேற்றுங்கள்.

**சங்கீதம் 17:3b என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன்.**

---

# வினாவிடை 106
## சரியான பதில்கள்

01. தாவீது - சங்கீதம் 42:3
02. நியாயாதிபதிகள் நாள்களில் இஸ்ரவேலர் - நியா 10:15-16
03. அகிரிப்பா ராஜாவும், பெர்னீக்கேயாளும் - அப்போஸ் 25:23, 26:28
04. தாவீது - IIசாமுவேல் 16:5-7
05. யெரோபெயாமின் மனைவி அகியா தீர்க்கதரிசிக்கு - Iஇராஜா 14:1-6
06. சாலொமோன் - பிரசங்கி 11:10
07. தாவீது - சங்கீதம் 102:10
08. எண்ணாகமம் 9:5-6
09. கிதியோன் - நியாயாதிபதிகள் 6:25-27
10. சீஷர்கள் - லூக்கா 24:53


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# C.T.ஸ்டட்
## 1862 - 1931

## கிறிஸ்து மட்டும் போதும்

"நர மாமிசப் பட்சிணிகளுக்கு மிஷனெரி கள் தேவை" என்ற விந்தையான விளம்பரம் அது. ஸ்டட் கண்களையும் கருத்தையும் அது கவர்ந்தது. நற்செய்தி அறிவிக்கும் ஆர்வத்தால் உந்தப்பட்டார். தன் வாழ்நாளின் கடைசி மிஷனெரி பயணமாக ஆப்பிரிக்க நாடு நோக்கிப் பயணமானார் ஸ்டட்.

இவர் ஒரு பெரும் பணக்காரர். தந்தையின் ஆஸ்திகளோ ஏராளம். இவர் ஒரு சிறந்த புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரும் கூட. தனது 25ஆவது பிறந்த நாள் தினத்தில் தன் சொத்து மதிப்புகள் 25ஆயிரம் பவுன்களையும் ஊழியத்திற்கு கொடுத்துவிட்டார்.

மூடி பிரசங்கியாருக்கு 5000 பவுன்களையும், அனாதைகளின் தகப்பன் ஜார்ஜ் முல்லருக்கு 5000 பவுன்களும், இரட்சண்ய சேனையின் தலைவரான வில்லியம் பூத்திற்கு 4000 பவுன்களும், ஹாலந்தில் உள்ள ஜார்ஜ் என்பவருக்கு 5000 பவுன்களும், மீதமுள்ள அனைத்து சொத்துக்களையும் ஊழியர்களுக்கு பிரித்து அனுப்பினார்.

இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் மாணவர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகக் காரணமானார். இதனால் 'கேம்பிரிட்ஜ் எழுவர் குழு' உருவானது. இவர்கள் அனைவரும் தங்களை மிஷனெரிகளாக ஒப்புக்கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுக்கு மிஷனெரியாகச் சென்ற ஸ்டட் அங்கு 10 வருடங்களும், இந்தியாவில் 06 வருடங்களும் மிஷனெரியாகப் பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஏராளமான ஆத்தும ஆதாயக் கூட்டங்களை நடத்தி ஆயிரக்கணக்கானோரை ஆண்டவரின் பணிக்கு அர்ப்பணிக்கச் செய்தார்.

இறுதிப்பயணமாக இருண்ட கண்டத்திற்குச் சென்று 20 ஆண்டுகளாக இரட்சகர் இயேசுவை இருளில் வாழ்ந்த இதயங்களுக்கு அறிவித்து அவர்களை ஒளியின் பிள்ளைகளாக மாற்றிய ஸ்டட், தன் 70ஆவது வயதில் மிகவும் மகிழ்ச்சியுடன் இறைவனிடம் சென்றார். தன்னையோ பிறரையோ சார்ந்திராமல் கிறிஸ்துவையே சார்ந்திருந்த தியாகத் தொண்டர் நம்மையும் அப்பணிக்கு அறைகூவி அழைக்கிறார் அல்லவா?

**அன்பரே! அழைப்பின் சத்தத்திற்கு எப்பொழுது செவிகொடுக்கப் போகிறீர்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நரகத்தின் நுழைவு வாசலில் ஒரு மீட்பின் கடையை நடத்த விரும்புகிறேன். — சி.டி.ஸ்டட்**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜுலை 16



## பால்பிராண்ட்
## 1914 - 2003

## இறைசாயல் வெளிப்படட்டும்

நீங்கள் மிஷனெரி பிள்ளைகளா? அப்படியானால் மிஷனெரிப் பணியின் தாகம் உங்களுக்கு இருக்க வேண்டும். சரி, நீங்கள் மிஷனெரி பிள்ளைகளாக இல்லையானாலும் பரவாயில்லை. நீங்கள் ஆண்டவரின் பிள்ளைகள், உங்களுக்கு ஊழியத்தைக் குறித்த வாஞ்சை கண்டிப்பாக இருக்க வேண்டும்.

பால் பிராண்ட், கொல்லி மலையின் விடிவெள்ளிகளான ஜெசிமன் பிராண்ட் மற்றும் ஈவ்லின் பிராண்ட் அவர்களின் மூத்த மகன். தனது தங்கையுடன் இருண்ட மலைப்பகுதியில் உள்ள தங்களது மரவீட்டில் தனியாக இருக்கும் போது ஒரு நாள் அவரது தாய் பின்வருமாறு கூறினார்; மகனே நீ ஒரு நாளும் தனியாக இல்லை. தேவன் உன்னோடு கூட இருந்து உன்னை கவனித்து காப்பாற்றுகிறார். இந்த அருமையான வார்த்தைகள் பால்பிராண்டை சிறுவயதிலிருந்தே கிறிஸ்துவுக்குள் வழிநடத்தின. இவரது தாயே இவருக்கு முதல் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பெற்றோருக்கு சிறுபருவம் முதலே கீழ்ப்படிந்து நடந்த இவர், அவர்களுடன் ஊழியங்களுக்குச் செல்வதில் மிகுந்த வாஞ்சையுடன் செயற் பட்டார். ஆண்டவரின் பெரிதான கிருபையினால் லண்டன் சென்று கல்வி கற்றார். மருத்துவ படிப்பு முடித்து அறுவை சிகிச்சைத் துறையிலும் முதுகலைப்பட்டம் பெற்றார். இந்நிலையில் இந்திய நாட்டில் தொழுநோயாளிகளாகக் காணப்பட்ட மக்கள் மேல் கனிவு கொண்டு தனது மனைவியுடன் தொழுநோயாளர்களின் துயர் துடைக்கவும், அவர்களைக் குணப்படுத்தவும் தமிழ்நாட்டிற்கு வந்தார். அதனை தலைநிமரச் செய்தார்.

தமிழ்நாட்டில் தொழுநோயாளிகள் மத்தியில் பணிகளினாலும், புதுமைகளினாலும் உலக அளவில் தொழுநோயாளிகளின் சிகிச்சையில் உண்மையான முன்னேற்றத்தைக் கொடுத்தார். ஆழமான விசுவாசமும் அர்ப்பணிப்பும் கொண்ட இவர், சிறந்த புத்தகங்கள் எழுதியதோடு பல விருதுகளையும் பெற்றார். உலக லெப்ரசி மிஷனின் தலைவராகப் பணியாற்றி தொழுநோயாளிகளின் நலனுக்காகவே உழைத்த பால்பிராண்ட் சரித்திரம் பேசும் சாதனையாளராவார்.

**அன்பரே! ஒவ்வொரு மனிதனிலும் இறைவனின் சாயலைக் காண்கிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இளம் வயதிலிருந்தே உத்தம கிறிஸ்தவ பயிற்சி பெறுகிறவர்கள், பிற்காலத்தில் திருச்சபைக்கும், உலகுக்கும் ஏராளமான நன்மை செய்வார்கள்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜுலை 8**

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 104

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. எரேமியா – எரேமியா 1:1
03. ஆத்துமாவைக் – நீதி 19:16
06. காலங்கள் – சங்கீதம் 31:15
07. நாகாஸ் – 1சாமு 11:2
13. இக்கபோத் – 1சாமு 4:21

**வலமிருந்து இடமாக**

02. அன்னாள் – 1சாமு 1:13
04. கமாலியேல் – எண் 10:23
05. முகஸ்துதி – நீதி 28:23
09. பினெகாஸ் – எண் 25:8
11. எலெயாசார் – 1சாமு 7:1
14. சவுல் – 1சாமு 10:22

**மேலிருந்து கீழாக**

01. எல்க்கானா – 1சாமு 1:1
03. ஆபிரகாம் – ஆதி 22:14
04. கழுதுகளை – 11சாமு 1:23

**கீழிருந்து மேலாக**

08. பெயர்செபா – 1சாமு 8:2
10. தொபியா – நெகே 4:3
12. ஏலி – 1சாமு 4:18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைமைப்போதகர், சீயோன் தேவாலயம், இலங்கை.




## விடுவிக்கும் ஆண்டு 2022

**... அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். — சங்கீதம் 107:28 -**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிறந்திருக்கும் 2022ஆம் ஆண்டின் முதல் அனல் சஞ்சிகை ஊடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பிறந்திருக்கும் புதிய ஆண்டில் தேவ கிருபையும் - பாதுகாப்பும் தொடர்ந்தும் உங்கள் அனைவருடனும் இருப்பதாக என எனது குடும்பத்தின் சார்பிலும், சீயோன் தேவாலயத்தின் சார்பிலும் வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும், இனிய புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 2021ஆம் ஆண்டு தேவன் திருச்சபையாக நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம்;

**என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.**
**மல்கியா 4:2**

கடந்த ஆண்டை திரும்பிப் பார்க்கும் போது அவர் நடத்துதல் அற்புதமாய், ஆச்சரியமாய் இருந்துள்ளது. அவர் கடந்த ஆண்டு நமக்கு கொடுத்த நிபந்தனை **'அவருடைய நாமத்திற்கு பயப்படும் பயம் நமது வாழ்வில் காணப்பட வேண்டும்'.** அவ்விதமாக அவருடைய கட்டளை/ நிபந்தனைகளை ஏற்று அதற்கு அர்ப்பணித்த அனைத்து தேவ பிள்ளைகள் மேலும் **'நீதியின் சூரியன் உதித்தது'.** நிச்சயமாகவே கடந்த ஆண்டு பிரகாசிப்பிக்கும் ஆண்டாக அமைந்திருந்தது.

இன்று பிறந்திருக்கும் 2022 ஆம் ஆண்டில் ஆண்டவர் நமக்கும் நமது திருச்சபைக்கும் கொடுக்கும் வாக்குத்தத்தம்:

**...அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.**
**சங்கீதம் 107:28**

**.... And he bringeth them out of their distresses.**
**Psalms 107:28**

இக்கட்டுகள் என்பதற்கு; கவலை, துன்பம், வேதனை, துயரம், உடனடி உதவி நாடும் நிலை, தீவிரமான பதட்ட நிலை, அசௌகரியம், ஆபத்து, பயங்கள், நெருக்கடி நிலமை என பலவாறு அர்த்தப்படுத்த முடியும்.

இன்றைக்கு உலகத்தின் மனிதர்கள் இக்கட்டு, இடையூறு அற்ற வாழ்வு வாழ்வதனையே பெரிதும் விரும்புகிறார்கள். அதே போல இன்றைய கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவை அறிந்து கொண்டால் தங்களுக்கு எவ்விதமான இக்கட்டுக்களும் இல்லையென்றும் எதிர்பார்க்கிறார்கள், நினைக்கிறார்கள். ஆனால் அப்படி இக்கட்டுக்கள் இல்லாத வாழ்வு என்ற நினைப்பிருந்தால் அது முற்றிலும் தவறு என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**யோவான் 16:33 என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உபத்திரவம் நமக்கு இருக்கின்றது** என்பதனை இவ் வசனம் தெளிவு படுத்துகிறது. இக்கட்டுக்கள், உபத்திர வங்கள் நம்மை சுற்றி நெருக்குகிற பொழுதெல்லாம் ஒரு போதும் நாம் அதற்குள்ளே மாண்டு மழுங்கிப் போக மாட்டோம். **ஏனென்றால் உலகத்தையும், உபத்திரவத்தையும் ஜெயித்தவர் நம்மோடு இருப்பதினால் இக்கட்டுக்களிலிருந்து அவர் நமக்கு விடுதலை கொடுக்கிறார்.**

பழைய ஏற்பாட்டில் நம் எல்லோருக்கும் நன்கு பரீட்சயமான சம்பவத்தை முன்வைக்க விரும்புகின்றேன். யாக்கோபும் அவன் சந்ததியும் கானான் தேசத்தை விட்டு எகிப்திற்கு சென்று அங்கே பலுகிப் பெருகி வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில், யோசேப்பையும் இஸ்ரவேலருடைய செயல்களையும் அறியாத ராஜாக்கள் எகிப்திலே தோன்றினார்கள். அப்பொழுது, **யாத்திராகமம் 2:23 சிலகாலம் சென்றபின், எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது.**

நெருக்கடிகள் தேவ ஜனத்தை சூழ்ந்து கொண்ட பொழுது அவர்கள் தேவனை நோக்கி முறையிட்டார்கள். **தேவ சந்நிதியில் அவர்களுடைய முறையிடுதல் எட்டிய பொழுது 'அவர்கள் இக்கட்டுக்களிலிருந்து அவர்களை விடுவிக்கும்படியாக தேவன் அவர்களை நினைத்தருளினார்.'**

**யாத்திராகமம் 2:25 தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்.**

இந்த நேரம் முதல் இஸ்ரவேலர்கள் சந்தித்த நெருக்கடிகள், வேதனைகள், இக்கட்டுக்கள் குறித்து பெரிய பட்டியலையே நாம் கொடுக்க முடியும். இவர்களுடைய இக்கட்டின் உச்சக்கட்டம் செங்கடலில் / சிவந்த சமுத்திரத்தில் வெளிப்படுவதைப்பார்க்கிறோம். பார்வோனுக்கு தேவன் தன்னுடைய வல்லமைகளை ஒவ்வொன்றாய் காண்பிக்கிறார். இறுதியிலே எகிப்தியருடைய தலையீற்று அனைத்தும் சங்கரிக்கப்படுகின்றன. இதனால் கலக்கமடைந்த பார்வோன் ஒருவாறு இஸ்ரவேல் ஜனங்களை போகவிடுவதற்கு சம்மதிக்கிறான். அந்த இராத்திரியோடு இராத்திரியாக அவர்கள் ஆயத்தங்களைச் செய்து தேவனை ஆராதிப்பதற்காக, ஒரு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழும்படியாக புறப்பட்டு வரும் போது அவர்களுக்கு முன்னால் தொடர்ந்து செல்ல முடியாதபடி செங்கடல் / சிவந்த சமுத்திரம் இருந்தது. அவர்களுக்குப் பின்பதாக பார்வோனின் ரதங்களும், சேனைகளும் நெருக்கிக் கொண்டு வந்தது. அப்போது என்ன செய்வது என்று தெரியாமல் இஸ்ரவேல் ஜனங்களுடைய அத்தியாயம் முடிந்தது என்று நினைக்கும் அளவு மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் முகங்கொடுக்கின்ற நேரத்திலே அனேகர் செய்வதறியாது திகைத்தார்கள். இன்னும் அனேகர் அனேக காரியங்களைச் சொல்லி முறுமுறுத்தார்கள்.

இன்றைக்கு தேவ பிள்ளைகளாகிய நீங்கள் இந்த இக்கட்டான சூழ்நிலையில் என்னமாதிரியான பிரதிபலிப்பை காண்பிக்கிறீர்கள். தளர்ந்து போகும் வார்த்தைகளை அறிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடுகிறீர்களா? கர்த்தரையும் அவருடைய பராக்கிரமத்தையும் நம்பாமல் முறுமுறுக்கிறீர்களா?

**யாத்திராகமம் 14:9-14 (9.) எகிப்தியர் பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் அவனுடைய குதிரைவீரரோடும் சேனைகளோடும் அவர்களைத் தொடர்ந்து போய், சமுத்திரத்தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள். 10. பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். 11. அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? 12. நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள். 13. அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். 14. கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.**

அப்போது அந்த இக்கட்டிலே மோசே தேவனுடைய கட்டளைப்படி தன்னுடைய கோலை நீட்டி செங்கடலை இரண்டாகப் பிளக்கப்பண்ணுகிறார். கடல் இரண்டாகப் பிளந்து மதிலாய் நின்றது. அதற்கூடாக ஜனங்கள் வெட்டாந்தரையிலே நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பின்னாலே பார்வோனின் ரதங்களும் குதிரைகளும் கூடவே இவர்களைத் துரத்திக் கொண்டு வருகின்றது. அந்த வேளையில் கர்த்தரின் பராக்கிரமத்தின் செய்கையாலே முன்னால் சென்ற மேகஸ்தம்பம் அவர்களுக்கு பின்னாலே வந்தது. அது எகிப்தியருக்கு மேகமும் அந்தகாரமுமாயிற்று. ஆனால் இஸ்ரவேலருக்கோ அது வெளிச்சமாயிற்று. செங்கடலிலே பார்வோனின் சேனையை கர்த்தர் கலங்கடித்தார். அந்த நேரத்தில் எகிப்தியர் திரும்புவோமா என்று நினைக்கும் வேளையில் மோசே கோலை சமுத்திரத்தின் மேல் நீட்டுகிறார்.

**யாத்திராகமம் 14:26 கர்த்தர் மோசேயை நோக்கி: ஜலம் எகிப்தியர் மேலும் அவர்களுடைய இரதங்கள் மேலும் அவர்களுடைய குதிரைவீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றார்.**

ஜலம் எகிப்தியருக்கு எதிராய் திரும்பி வந்தது. ஒருவரும் தப்பமுடியாதபடி அன்று ராத்திரியிலே பார்வோனின் சேனையை சமுத்திரத்திலே மாண்டு போகப்பண்ணினார். இவ்விதமாக இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வித்தியாசத்தை உண்டுபண்ணினார். இஸ்ரவேலர் தேவனை நோக்கி கூப்பிட்ட பொழுது அவர்களுக்கு அவர்களுடைய இக்கட்டுக்களிலிருந்து விடுவித்து மகிமையாய் வெளிப்பட்டார்.**

இன்றைய நாட்களில் மிகவும் இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். கொள்ளை நோய் உலகத்தை விட்டு நீங்கிவிடும் என்று நினைக்கிற வேளையில் உருமாறிய, திரிவுபட்ட பலவிதமான கொள்ளை நோய்கள் பெருகிக் கொண்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடி நிலைகள் தோன்றுகிறது. பஞ்சங்கள் - அரசியல் குழப்பங்கள் என பலவிதமான பயங்கரமான நிலைக்கு தேசம் முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது உலகத்தில் தொழிநுட்பத்தில் அபரிதமான வளர்ச்சி, எத்தனையோ வித்தியாசமான காரியங்களை கண்டு பிடிக்கின்றார்கள், செய்கின்றார்கள். மனிதனின் அறிவு பெருகிப்போய்க் கொண்டிருக்கிறது. இந்த அறிவைக் கொண்டு எவைகளையெல்லாம் செய்ய முடியுமோ, அத்தனையையும் மனிதன் செய்கிறான். விஞ்ஞானத்தைக் கொண்டு எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்றும் மனிதன் நினைக்கிறான். அதே போன்று கிறிஸ்தவ உலகத்தைப் பார்க்கிற போது துர்உபதேசங்கள் மலிந்து காணப்படுகின்றது. மனிதன் தன் எண்ணித்தில் தோன்றுவதையெல்லாம் உபதேசமாக்கி ஜனங்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறான்.

**இவைகள் புதிது அல்ல, மாறாக ஆண்டவருடைய வருகைக்கு அடையாளமாக இவைகள் சம்பவிக்க வேண்டிய** காரியங்களாகவே இருக்கிறது. இந்த நாட்களில் நாம் தேவனைத்தேடாது சூழ்நிலைகளைப் பார்த்து பயந்து முறுமுறுத்து தேவன் எங்களைக் கைவிட்டார் என்று புலம்பி, அதிகாரிகளை, ராஜாக்களை திட்டித்தீர்த்து ஒரு பின்மாற்றமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தால் தேவன் எங்கள் இக்கட்டுக்களில் இருந்து எப்படி எங்களை விடுதலையாக்க முடியும்.

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் நம்முடைய பொல்லாத வழிகளை விட்டு தேவனைத் தேடும் போது அன்றைக்கு இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் வித்தியாசத்தை உண்டு பண்ணின தேவன் நமக்கும் உலகத்திற்கும் வித்தியாசத்தை உண்டுபண்ண வல்லமையுள்ளவராக இருக்கிறார். ஒரு சிறு கூட்ட ஜனமாக எங்களை தாழ்த்தி அவருடைய முகத்தை தேட அர்ப்பணிக்கும் போது தேவன் எங்களையும் எங்கள் இக்கட்டிலிருந்து விடுவிக்க மேகஸ்தம்பமாக, அக்கினிஸ்தம்பமாக வெளிப்படுவார். **அவர் உங்களுக்கும் உலக ஜனத்திற்கும் வித்தியாசத்தை உண்டுபண்ணுவார்.** செய்வதறியாது திகைக்க தேவையில்லை. அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சொற்ப ஜனங்களாக அவருடைய முகத்தை மாத்திரம் தேடுவோம். **அவர் எல்லா இக்கட்டிலிருந்தும் விடுவிக்க வல்லவராகவும், அமைதியான, பாதுகாப்பான, சுகவாழ்வை துளிர்க்கப்பண்ண இந்த 2022ஆம் ஆண்டிலே பராக்கிரமசாலியாகவும் எங்களோடு கூடவே இருப்பார்.**

ஆண்டவரினால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட டேவிட் பிரெய்னாட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(David Brainard)* என்ற தேவமனிதனுடைய வாழ்வில் அவருடைய சிறு பிராயத்தில் நடைபெற்ற ஒரு உண்மை சம்பவத்தை உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். டேவிட் பிரெய்னாரும் அவருடைய நெருங்கிய சிநேகிதரும் ஒன்றாக விளையாடும் படியாக அடிக்கடி வெளியில் செல்வார்கள். அவ்விதமாக ஒருநாள் இருவரும் விளையாடும்படி சென்று விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது அருகில் இருந்த கிணற்றுக்குள் டேவிட் பிரெய்னாட் தவறி விழுந்து விட்டார். அது ஒரு பாரிய ஆழமான கிணறு. அவருடைய நண்பனாகிய சிறுவனுக்கு இவரைக் காப்பாற்றுவதற்கு முடியவில்லை. சுற்றி அருகாமையிலும் உதவிக்கு யாரும் இருக்கவில்லை. தன் நண்பனை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜனங்களிடம் உதவி கேட்டும் கிடைக்காமையால் நெடுந்தூரம் சென்று விட்டார். சில நிமிடங்கள் கழித்தே உதவி செய்வதற்கு சிலர் முன்வர அவர்களை அழைத்துக் கொண்டு கிணற்றை நோக்கி ஓடி வருகிற பொழுது நேரம் தாமதமாகிவிட்டது என்பதனை உணர்ந்த நண்பன் மிகுந்த வேதனையோடு தன் நண்பனை காப்பாற்ற முடியவில்லை என்ற ஏக்கத்தோடு, நண்பனை இழந்து விட்டேன், இனி விளையாடுவதற்கு எனக்கு நண்பன் இல்லை என்கிற உணர்வோடு கிணற்றண்டை நெருங்கிப் பார்த்த பொழுது கிணற்றுக்கட்டின் மேல் அவன் நண்பன் டேவிட் பிரெய்னார் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்து பிரமித்துப் போய்விட்டான்.

எவ்வாறு நீ காப்பாற்றப்பட்டாய் என்று வினவிய போது டேவிட் பிரெய்னார் சொன்னார்; நீண்ட வெண் வஸ்திரம் தரித்த அதி பிரகாசம் கொண்ட ஒரு அழகான நபர் என்னைத் தூக்கி இந்தக் கிணற்றுக் கட்டில் இருத்தினார். அதன் பின் அவரைக் காணவில்லை. அவர் யார் என்றும் எனக்குத் தெரியவில்லை என்று சொன்னார்.

அருமையான தேவ ஜனமே டேவிட் பிரெய்னாட் என்ற சிறுவன் உயிர் பிழைக்கமாட்டான், என் நண்பனாலும் எனக்கு உதவி செய்ய முடியாது, சுற்றிலும் உதவிக்கு யாரும் இல்லை என்ற பேராபத்தான இக்கட்டுக்குள் சிக்கித்தவித்த அச் சூழ்நிலையில் ஏதோ ஒரு வகையில் இல்லாதவைகளை இருக்குமாப்போல் அழைக்கும் ஆண்டவர் அவரை விடுவிக்க யாரும் இல்லாத இடத்தில் அவரே இறங்கி அச் சிறுவனுடைய இக்கட்டிலிருந்து விடுதலையாக்கினார். அதன் பின்னர் அச் சிறுவன் வல்லமையான தேவமனிதனாக பிரகாசிக்க ஆரம்பித்தார்.

இந்த ஆண்டுக்குரிய வாக்குத்தத்தம் அடங்கிய **சங்கீதம் 107:28**இன் பின்னணியைப் பார்க்கின்ற போது **(சங்கீதம் 107:23-30)** ஒரு கடல் யாத்திரையிலே ஜனங்கள் எதிர்நோக்குகிற பிரச்சினையான, பாதை தெரியாத நிலை, கொந்தளிப்பு, மூழ்கிப்போய்விடுவோமா என்ற அச்சம், உயிராபத்து போன்ற பலதரப்பட்ட சூழ்நிலையிலும் இந்த வாக்குத்தத்தம் அடங்கிய வசனத்தின் அடிப்படையில் கர்த்தரை நோக்கி கூப்பிட்ட போது; **சங்கீதம் 107:29-30 (29.) கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது. 30. அமைதலுண்டான**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினமித்தம் அவர்கள் சந்தோஷப்படு கிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத் தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கி றார்.** ஒரு பாதுகாப்பான, அமைதியான வாழ்வை தேவன் கட்டளையிடுகிறார். ஆகவே எங்களுடைய வாழ்க்கை என்னும் கடல் யாத்திரையிலே இயேசு கூட இருந்தால் சோர்ந்து போக, பயந்து போகத் தேவையில்லை. அவர் இறுதி வரை நடத்துவார்.

எனவே ஆண்டவர் எங்களையும் எம்முடைய இக்கட்டுக்களிலிருந்து இவ் விடுதலையின் ஆண்டாகிய 2022இல் நடத்துகிற பொழுது நாமும் அவருக்காக பிரகாசித்து மிளிருவோம். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறது.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**

## குறுக்கெழுத்துப் போட்டி - 104, வினா விடை - 106

### *சரியான விடை எழுதியவர்கள்*

**யாழ்ப்பாணம்**
01. பெனான்டோ ஜெசிதரன் +

**ஊர்காவற்றுறை**
02. சி.பசுபதி

**அனலைதீவு**
03. எஸ்.டிலக்சனா

**கனடா**
04. குகன் குடும்பம்

**காரைநகர்**
05. ரகுராசா றணித்தா
06. ரகுராசா தர்சிகா
07. நா.கிறிஸ்தீனா
08. வி.அனுராதா

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

**அனல் 2021 கார்த்திகை - மார்கழி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**பொருத்தனை**

(உபாகமம் 23:21-23)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

பஞ்சத்தால் பரிதபித்த பாவை ஒருத்தி, சொந்தமும் சொந்த மண்ணும் வேண்டாமென உதறி போனாள். வசந்தம் தேடி பரதேசம் சென்ற இடத்தில் மன்னனும் மகவும் மண்ணுக்குச் செல்ல மனம் நொந்து சொந்த ஊர் வந்து, இன்பமென பெயர் கொண்ட அவள் கசப்பென மாற்றி அழைக்கச் சொன்ன பெயரென்ன?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றங்கள்..

**வேதப்பகுதி: எபேசியர் 4:21-32**

மோனிகா கிறிஸ்தவப் பெண் அல்ல. ஆனால் விடுமுறை வேதாகமப் பள்ளிக்குச் சென்ற போது இயேசுவைக் குறித்து அறிந்தாள். அவள் இயேசுவை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தாள். ஆனால் துவக்கத்தில் அவளுடைய அப்பா, அம்மா நீ மதம் மாறக்கூடாது என்று திட்டினார்கள். ஆனால் இப்போது நீ நம்புகின்ற இயேசுவையே நீ வணங்கு என்று சொல்லிவிட்டார்கள். ஏனென்றால் முன்பெல்லாம் மோனிகா அடம்பிடிப்பாள். எதற்கும் உடனே கீழ்ப்படிய மாட்டாள். அதிக நேரம் டி.வி பார்க்கக்கூடாது என்றால் கேட்கமாட்டாள். பாடங்களைக் கூட நன்றாக படிக்கமாட்டாள்.

ஆனால் இப்போதோ எதைச் சொன்னாலும் உடனே செய்கிறாள். டி.வி பார்க்கமாட்டாள். பாடங்களை நன்றாக படிக்கிறாள். மிகவும் நல்ல பிள்ளையாக அவள் மாறிவிட்டாள். இயேசுவை ஏற்றுக்கொண்ட பின் அவளிடம் ஏற்பட்ட நல்ல மாற்றங்களால் பெற்றோருக்கு மிகவும் மகிழ்ச்சி.

**சிந்தனைக்கு:-**

**கர்த்தரை உண்மையாய் ஏற்றுக்கொண்டவர்களிடம் நல்ல ம[illegible]ங்கள் காணப்பட வேண்டும். அந்[illegible]ால் மற்றவர்களுக்கு[illegible]ம்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயா[illegible]

# அனல்

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 300.00 |
| இந்தியா (India) | 650.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1100.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 700.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 900.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 900.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்


பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

.........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2022

இனிய
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!

*Wish You a Happy New Year*



To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org